JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
College with Potential for Excellence
Re - Accredited (3rd Cycle) with "A" Grade by NAAC
(Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, South India.
PG AND RESEARCH DEPARTMENT OF COMPUTER SCIENCE
PRESENTS
SWAP 2K16
SEPTEMBER 8 & 9, 2016
online registration
www.jmc.edu/swap2k16

ஜமாலியன் டைம்ஸ்
Since 1951
Show Us The Right Path
தமிழ் மாத இதழ்


August 19th
World Photography Day
காட்சி தொடர்பியல்துறை
சார்பில்
புகைப்படக் கண்காட்சி
மற்றும் கருத்தரங்கம்

இதழ்-1 சுற்று-1 தனிச்சுற்று
JAMALIAN TIMES
இலவச பிரதி ஆகஸ்டு, 2016

ஆங்கிலம், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளை தெரிந்துக் கொண்டால்

உலக அளவில் சாதிக்க முடியும்

மாணவர்கள் ஆங்கிலம், ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளை தெரிந்துக் கொண்டால் உலகத்தில் பல சாதனை களை நாம் சையாளாலாம் என்று திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் பி.எஸ்.சி விஷுவல் கம்யூனிகேசன் பாடப்பிரிவு தொடக்க விழாவில் திரைப்பட இயக்குனர் அமீர் கூறினார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி தொடங்கப் பட்டு 65 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதில் படித்த அனைவரும் பல்வேறு நாடுகளில் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த கல்லூரியில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் இருந்து வருகின்றன. குறிப்பாக தொழில் பிரிவு சார்ந்த பட்டப் படிப்புகளும், இருந்து வருகின்றன. திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் புதியதாக பி.எஸ்.சி விஷுவல் கம்யூனிகேசன் பாடப் பிரிவு தொடக்க விழா நடைப்பெற்றது. தொடங்கப் பட்ட ஆண்டு முதலே மாணவர் களுக்கு ஏதுவாக பல்வேறு நாளிதழ்கள், சேனல்களில் புரிந் துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

வேந்தர்டி. விமற்றும் மக்கள் குரல், மணிச்சுடர் ஆகிய நாளிதழ்கள் மற்றும் டிரினிட்டிமிர்ரர் ஆங்கில நாளிதழ் ஆகிய கம்பெனிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் டாக்டர் முகமது சாலிகு தலைமை வகித்து பேசினார். துறை பொருப்புத் தலைவர் ஜார்ஜ் அமலரத்தினம் வரவேற்று பேசினார். கல்லூரி செயலாளர் தாளாளர் முனைவர் காஜா நஜ்முதீன், உதவி செயலாளர் ஜமால் முகமது, பொருளாளர் கலீல் ரஹ்மான், இயக்குநர்கள் முனைவர் அப்துல் சமது, முனைவர் முஹமது பாசில், பேராசிரியர் ஜமால் முஹமது ஜுபைர், துணை முதல்வர்கள் முனைவர் முஹமது இப்ராஹீம், முனைவர் இஸ்மாயில் மைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி செயலாளர் முனைவர் காஜா நஜமுதீன், உதவி செயலாளார் ஜமால் முஹம்மது, பொருளாளர் கலீலுார் ரஹ்மான் ஆகியோர் தலைமையில் மக்கள்குரல் மற்றும் டிரினிட்டி மிர்ரர் ஆசிரியர் முத்துக்குமார், மணிச்சுடர் நாளிதழின் செய்தி ஆசிரியர் காயல் மகபூப், வேந்தர் டிவி சார்பில் திருச்சி செய்தி யாளர் குமார், திருச்சி செய்தியாளர் சாகுல் ஹமிது ஆகியோர்

ஜமால் முஹம்மது கல்லூரி விஷுவல் கம்யூனிகேசன் துறை தொடக்க விழாவில் திரைப்பட இயக்குனர் அமீர் மாணவர்களுக்கு அறிவுரை

JAMAL MOHAMED COLLEGE (Autonomous)
DEPARTMENT OF VISUAL COMMUNICATION
Inaugural Function of First Batch of
B.Sc., Visual Communication Programme
(2016 - 2017)
&
Signing of Memorandum of Understanding

முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்த்தில் மாணவர் களுக்கு செய்தி மற்றும் ஒளிப்பதிவு மற்றும் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கு பயிற்சி அளிப்பது, மற்றும் இறுதி ஆண்டில் இரண்டு மாத்த்திற்கு செய்முறை விளக்கமும், பயிற்சியும் அதன் பின்பு திறமையான மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது என இந்த புரிந்துணர்வு ஒப்பந் தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

மணிச்சுடர் செய்தி ஆசிரியர் காயல் மக்புப் பேசியதாவது,

இத்துறையில் மாணவர்கள் பல சாதனைகளை செய்ய வேண்டும். அதற்கு முன்பாக வரலாற்றை அதிகம் அதிகம் படித்து தெரிந்துக் கொள்ள வேண்டும். ஜமால் முஹம்மது கல்லூரியின் வரலாற்றை தெரிந்துக்கொள்ள வேண்டும். ஜமால் கல்லூரியை தோற்றுவித்த ஜாமல் முஹம்மது, நைனார் முஹம்மது ராவுத்தர் ஆகியோர் சுதந்திர போராட்ட தியாகிகள் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது ஆகும். இன்றைய தலைமுறையினர் வரலாற்றை படிக்காமல் எதிர் காலத்தை சிந்தித்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வரலாற்றை அறிந்தால் தான் எதிர்காலத்தில் சாதிக்க முடியும் என்பதை யாரும் மனதில் கொள்வதில்லை. காயிதே மில்லத் போன்ற வரலாற்று தலைவர்களை அறிந்து செயல்பட்டால் மீடியா துறையில் பல மைல் கல்களை அடைய முடியும்.

விஷுவல் கம்யூனிகேசன் துறையில் விளம்பரம், இதழியல், கேமரா போன்ற பாடங்களை கற்று அதற்கான பயிற்சிகளை அவ்வப்போது, அப் பொழுதே செய்து பயிற்சி கொள்ள வேண்டும். மேலும் மதிப்பு கூட்டும் கல்வி என்ற பாடமும் உண்டு. அந்த பாடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும். பொது இடங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும். எப்படி பேச வேண்டும் மற்றும் மேடையில் எப்படி பேசுவது. போன்ற வற்றை சரியான முறையில் கற்றுக்கொள்ள வேண்டும். காரணம் பல அறிஞர்களுக்கு பொது இடங்களில் எப்படி பேச வேண்டும் என்று தெரியாமலே இருக்கிறது. அதற்கு உதாரணம் தாமஸ் ஆல்வா எடிசன் போன்றோர் ஆவர். அதனால் மாணவர் களாகிய நீங்கள் இதிலும் சிறந்து விளங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மதுரை காமராசர் பல்கழைக்கழகத்தின் முன் னாள் இதழியல் துறை தலைவரும் ஊடக அராய்ச்சி இயக்குனர் முனைவர் சாந்தா பேசுகையில்,

மாணவர்களாகிய நீங்கள் எதிர்காலத்தில் எதையாவது சாதிக்க வேண்டும் என்றால் பிரபல எழுத்தாளர்களின் கதைகளை மாணவர்கள் அதிகம் படித்து அதில் உள்ள கருத்துகளை குறும்படங்களாக உருவாக்கிட வேண்டும். ஆக்கபூர்வமான கருத்துகளை ஊடகம் வாயிலாக எவ்வாறு மக்களிடம் எடுத்து செல்ல வேண்டும் என்பதை மாணவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். நல்ல எண்ணங்களை மாணவர்கள் தங்களுக்குள் வளர்த்துதெடுக்க வேண்டும் ஏனேனில் எண்ணங்களே செயல்களாய் உருப்பெறும் தன்மையுடையதாய் இருக்கின்றன. நவின ஊடகங்கள் பற்றிய அறிவு மாணவர்களுக்கு மிகவும் அவசியமானாதாகும் அவற்றை மாணவர்கள் இக்கல்லூரி காலங்களில் நல்ல முறையில் கற்று அதை எதிர்காலத்தில் சிறப்பாக பயன்ப்படுத்த வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.

மக்கள் குரல் மற்றும் டிரினிடி மிர்ரர் ஆசிரியர் முத்துக்குமார் பேசுகையில்,

மாணவர்கள் தங்கள் கல்லூரி நாட்களை நல்ல முறையில் பயன்படுத்தி ஊடக உத்திகளை கற்றுக்கொள்ள வேண்டும். இதழியல் துறை தலைவர் சாந்தா சொன்னது போல மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டு அதை சிறப்பான முறையில் தங்கள் துறையினில் பயன் படுத்த வேண்டும். மேலும் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் உங்கள் துறை சார்ப்பில் சிறிய பத்திரிக்கை வெளியிட்டால் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக எங்கள் நிறுவனம் சார்ப்பில் பதிப்பித்து தருகின்றோம். அதேப் போன்று எங்கள் பதிப்பு சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் எங்கள் பத்திரிக்கை வெளி வந்துக் கொண்டு இருக்கிறது. நீங்கள் எப்போதும் வேண்டுமானாலும் எங்கள் நிறுவனத்திற்கு வந்து பயிற்சிகளை எடுத்துக் கொள்ளலாம். நாங்கள் எப்போது வேண்டு மானாலும் உங்கள் திறமைகளை வளந்த்துக் கொள்ள உதவி செய்ய காத்திருக்கிறோம் இவ்வாறு அவர் பேசினார்.

திரைப்பட இயக்குநர் அமீர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில்,

இஸ்லாமிய கல்லூரிகளில் விஷுவல் கம்யூனி கேசன் துறை என்பது தொடங்க மாட்டார்கள் ஆனால் நீண்ட வருடங்களுக்கு பிறகு இஸ்லாமிய கல்லூரியில் விஷுவல் கம்ம்யூனிகேசன் துறை ஆரம்பித்திருப்பது மிகவும் வரவேற்புக்குரியதாகும். அதனாலே நான் ஜமால் முஹம்மது கல்லூரிக்கு வந்தேன். ஆர்வத்தோடு படிக்கும் படிப்பாகும். ஆர்வத்தோடு படித்தால் மட்டுமே வேலைவாய்ப்பு அமையப்பெறும். நான் படிக்கும் காலங்களில் பள்ளிப் படிப்பில் பத்தாம் வகுப்பை நண்பனின் உதவியோடு முடித்தேன். வீட்டில் படிப்பை பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் 12ம் வகுப்பு படிக்காமல் விட்டுவிடலாம் என்ற நோக்கில் இருக்க என் மாமா ஒருவர் 12ம் வகுப்பு கல்வியில் சேர்த்து பின் பல கஷ்டங்களில் முடிக்க கல்லூரியிலும் சேர்ந்து பின் பிடிக்காமல் சினிமா துறைக்கு வந்தேன். வீட்டில் பல வகையில் எதிர்ப்பு கிளம்பியது. ஒரு பிரபல இயக்குநரிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்து படம் வெளியாகும் சமயத்தில் பிரச்சனையின் காரணமாய் என் பெயர் போடவில்லை. அதன் பின் அந்த இயக்கு நரிடம் பேசலாம் என்று என் நண்பர்கள் கூறிய போது வேண்டாம் அந்த இயக்குநர் என்னை இயக்குநராக பார்க்க இருக்கிறார் என்று எடுத்து கொண்டேன். அதை தொடர்ந்து மௌனம் பேசியதே என்ற திரைப்படத்தையும் எடுத்தேன். அதில் பத்திரிக்கையில் விளம்பரத்தை பார்த்து தான் என்னுடைய நண்பர்கள், வாழ்த்து தெரிவித் தார்கள். ஆனால் என் குடும்பத்தார்கள் பேப்பரில் பார்த்து கூட இயக்குநராக நம்பவில்லை. மௌனம் பேசியதை படத்தை நான் கஷ்டப்பட்டு எடுத்த போது பல்வேறு இடையூறுகள் இருந்தன. இது போன்று பிரச்சனைகள் வெளிவரும் போது எதையும் சரியான முறையில் எடுத்துக் கொண்டு மாணவர்களாகிய நீங்கள் முன்னேற வேண்டும்.

2ம் பக்கம் பார்க்க...

GLOBAL UNDERSTANDING FOR SUSTAINABLE DEVELOPMENT
AWARD - 2016
AUDACIOUS DREAMS FOUNDATION
EDU-PRENEUR
AWARD
FOR PROMOTING HIGHER EDUCATION AMONG RURAL YOUNG PEOPLES
SRI LANKA
Youth

ஜமால் முஹம்மது கல்லூரி பி.எஸ்.சி விஷுவல் கம்யூனிகேசன் புதிய பாடப்பிரிவு தொடக்க விழாவில்

வேந்தர் டி.வி மற்றும் மக்கள்குரல், டிரினிட்டிமிர்ரர், மணிச்சூடர் நாளிதழ்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

JAMAL MOHAMED COLLEGE (Autonomous)
DEPARTMENT OF VISUAL COMMUNICATION
Inaugural Function of First Batch of
B.Sc., Visual Communication Programme

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் புதியதாக பி.எஸ்.சி விஷுவல் கம்யூனிகேசன் பாடப்பிரிவு தொடக்க விழா 23ம் தேதி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திரைப்பட இயக்குநர் அமீர், மதுரை காமராசர் பல்கலைக் கழக முன்னாள் இதழியல் துறை தலைவர் முனைவர் சாந்தா, மணிச்சுடர் செய்தி ஆசிரியர் காயல் மகபூப், மக்கள்குரல் மற்றும் டிரினிட்டி மிர்ரர் ஆசிரியர் ஆர்.முத்துகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். பின்னர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே காஜா நஜ்முதீன், முதல்வர் டாக்டர் முகமது சாலிகு ஆகியோர் முன்னிலையில் கையெழுத்திட்டனர்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி தொடங்கப்பட்டு 65 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதில் படித்த அனைவரும் பல்வேறு நாடுகளில் பணி புரிந்து வருகிறார்கள். இந்த கல்லூரியில் இளங் கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் இருந்து வருகின்றன. குறிப்பாக தொழில் பிரிவு சார்ந்த பட்டப் படிப்புகளும், இருந்துவருகின்றன. புதியதாக இந்த வருடம் பி.எஸ்.சி விஷுவல் கம்யுனிகேசன் புதிய பாடப்பிரிவு தொடங்கப்பட்ட ஆண்டு முதலே மாணவர்களுக்கு ஏதுவாக பல்வேறு நாளிதழ்கள், சேனல்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.

வேந்தர் டி.வி மற்றும் மக்கள் குரல், மணிச்சுடர் ஆகிய நாளிதழ்கள் மற்றும் டிரினிட்டி மிர்ரர்.ஆங்கில நாளிதழ் ஆகிய கம்பெனிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா 23ம் தேதி வியாழக் கிழமை காலை 10மணி அளவில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் டாக்டர் முகமதுசாலிகு தலைமை வகித்தார்.

கல்லூரி செயலாளர் தாளாளர் முனைவர் காஜா நஜ்முதீன், உதவிச் செயலாளர் ஜமால் முகமது, பொருளாளர் கலீல் ரஹ்மான், இயக்குநர்கள் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், முனைவர் அப்துல் சமது, முனைவர் முஹமது பாசில், பேராசிரியர் ஜமால் முஹமது ஜுபைர், துணை முதல்வர்கள் முனைவர் முஹமது இப்ராஹீம், முனைவர் இஸ்மாயில் மைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். துறை பொறுப்புத் தலைவர் டாக்டர் ஜார்ஜ் அமல ரத்தினம் வரவேற்று பேசினார்.

இதில் சிறப்பு விருந்தினராக திரைப்பட இயக்குநர் அமீர், மதுரை காமராசர் பல்கலைக் கழக இதழியல் துறையின் முன்னாள் தலைவரும் ஊடக ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் ஆ.சாந்தா, மக்கள்குரல் மற்றும் டிரினிட்டி மிர்ரர் ஆசிரியர் முத்துக்குமார், மணிச்சுடர் நாளிதழின்செய்தி ஆசிரியர் காயல் மகபூப் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

பின்னர் மாணவர்களுடன் எதிர்காலத்தின் மீடியா உலகைபற்றியும் மற்றும் சினிமாத்துறை பற்றியும் கலந்துரையாற்றினார்கள். பின்னர் மாணவரகள் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்தவர்கள் பதில் கூறினார்கள். நிகழ்ச்சிகளை உதவி பேராசிரியர் சண்முக வேலாயுதம் நன்றி கூறினார்.

1ம் பக்க தொடர்ச்சி...

இந்தியா முன்னேறிய காலத்தில் ஸ்லெம்டாக் மில்லியனர் என்ற படத்தை எடுத்து அதற்கு ஆஸ்கர் அவார்டு கொடுத்து உலக அளவில் பேச செய்ததை நாம் பெருமையாக நினைத்து கொண்டிருகிறோம்.

ஆனால் அதன் பின் இந்தியர்கள் என்றால் அவர்கள் சினிமா பிரபலங்களுக்காக கழிவுகளிலும் விழுவார்கள், அங்கே விபச்சாரம் அதிகம் என்பதை உலக நாடுகளுக்கிடையே அரங்கேற செய்ய அமெரிக்கா செய்த சதி என்பதை மாணவர்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.அதனால் அனைத்து படங்களையும் புரிந்து, பார்க்க வேண்டும்.நான் ஒரு சில நாடுகளுக்கு சென்ற போது இந்தியர்கள் என்று சொன்னால் தெரியாது. ஏ.ஆர் ரஹ்மான் என்று சொன்னாலே தெரியும், ஆனால் இந்தியா என்று சொன்னால் அப்படி ஒரு நாடு இருக்கிறதா என்று தெரியாமலே இருக்கிறது.

எனவே தான் மாணவர்களாகிய நீங்கள் தமிழ் மட்டுமில்லாமல் ஆங்கிலம், இந்தி, உள்ளிட்ட பல்வேறு மொழிகளை கற்றுக்கொண்டால் பல்வேறு சாதனைகளை புரியலாம். நான் தமிழை தவிர மற்ற மொழி தெரியாமல் இருக்கிற காரணத்தில் தான் நான் தமிழை விட்டு வேறெங்கும் செல்ல முடியாமல் இருக்கிறது. ராம் என்ற திரைப்பட்த்தை இந்தியில் ரீமேக் செய்ய கேட்டார்கள் ஆனால் மொழியில் பிரச்சனை என்பதா நான் போகவில்லை. மொழியினால் நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோம் என்பதை உணர முடிகிறது. அதற்காக தான் நாம் அனைவரும் பல்வேறு மொழிகளை கற்றுக் கொள்ள வேண்டும் உதாரணத்திற்கு உலக நாடுகளில் இந்தியர்கள் உணவு விடுதிக்குள் நுழைய கூடாது என்ற சட்டங்களை வைத்துள்ளார்கள். சாந்தா, காயல் மகபூப், போன்றோர் கூறியபடி கதைகளை படித்து, வரலாறுகளை அறிந்து நடக்க வேண்டும்.

ஜமால் முஹம்மது பற்றிய ஆவணப்படம் எடுக்கப்பட வேண்டும். அதை இத்துறை மாணவர்களே சவலாக எடுத்துக் கொண்டு ஆவணப்படத்தை தயாரிக்க வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் என்னைப்போன்று வர வேண்டும் என நினைக்க கூடாது. ஒவ்வொரு திறமைகளையும் வளர்த்து கொண்டு சாதனை புரிய வேண்டும்.உங்கள் வீட்டை வைத்தே நீங்கள் கதை எழுதலாம். அடுத்தவர்களின் கதையை கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆகவே நீங்கள் திறமைகளை வளர்த்து கொள்வதற்கு என்னால் முடிந்தா உதவிகளை செய்வேன். இவ்வாறு அவர் பேசினார். பின்னர், மாணவர்கள் பல்வேறு சினிமா சார்ந்த கேள்விகளுக்கு இயக்குநர் அமீர் பதிலளித்தார். விழாவில் முன்னாள் முதல்வர்கள் முனைவர் ஆர்.கே காதர் மொய்தீன், முனைவர் முஹமது ஜிந்தாஷா, விடுதி இயக்குநர் முனைவர் முஹம்மது சகாபுதீன், விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது சர்புதீன், ஜமால் முஹம்மது முன்னாள் மாணவர் சங்க திருச்சி மாவட்ட செயலாளர் அலீமுதீன், திருச்சி செய்தியாளர் எம்.கே ஷாஹுல் ஹமீது, ஜமால் முஹம்மது கல்லூரி விஷுவல் கம்யூனிகேசன் துறை பேராசிரியர் சண்முக வேலாயுதம், திருச்சி ஈ.வெ. ரா கல்லூரி காட்சித் தொடர்பியல் துறை தலைவர் பேராசிரியர் பிளெஸ்ஸி, முனைவர் செந்திலா தேவி மற்றும் துறை தலைவர்கள் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் கல்லூரியின் சுயநிதிப்பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால் நன்றி கூறினார்.

எய்ம்ஸ் சமூக நலச்சங்கம் மற்றும் ஜமால் முஹம்மது கல்லூரி இணைந்து

டி.என்.பி.சி, யூ.பி.எஸ்.சி அரசு போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்

எய்ம்ஸ் சமூக நலச்சங்கம், ஜமால் முஹம்மது கல்லூரி மற்றும் முன்னாள் மாணவார் சங்கம் இணைந்து அரசு வேலைவாய்ப்பு குறித்த விழிப் புணர்வு, அரசு டி.என்.பி.சி, யூ.பி.எஸ்.சி, அரசு போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் மற்றும் விழிப்புணர்வு முகாம் கூட்டம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி தாளாளர் செயலாளர் முனைவர் காஜா நஜ்முதீன் தலைமை வகித்து பேசினார். கல்லூரி முதல்வர் டாக்டர் முகமது சாலிகு அனைவரையும் வரவேற்று பேசினார்.

எய்ம்ஸ் சமூக நலச்சங்க தலைவர் பைஜுல் ரஹ்மான், அய்மான் மகளிர் கல்லூரி செயலாளர் ஹபிபுல்லா, தாளாளர் எம்.எம்.சாஹுல் ஹமீது, ஜமால் முஹம்மது கல்லூரி உதவி செயலாளர் ஜமால் முஹம்மது, பொருளாளர் கலீல் ரஹ்மான் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். விழாவில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி கற்பூர சுந்தரபாண்டியன், தாசில்தார் அக்பர் அலி, ரேடியன் ஐ.ஏ.எஸ் அகாடமி நிர்வாகி ராஜ பூபதி, மனித நேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.ஹெர். ஜவாஹிருல்லா, எஸ்.டி.பி.ஐ தலைவர் தெஹ்லான் பாக்கவி, ஆகியோர் அரசு வேலை வாய்ப்பு குறித்தும், எப்படியெல்லாம் தேர்வை எழுத வேண்டும், படிக்க வேண்டும், எந்த துறையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பேசினார்கள்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம்.முகம்மது அபுபக்கர் பேசியதாவது,

பல்வேறு சமூகத்தில் வாழும் பல்வேறு மக்கள் கல்வியில் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் வளர்ச்சியிலே முக்கிய பங்கு ஆற்று கிறார்கள். ஆனால், முஸ்லிம் சமுதாயம் பின்தங்கிய நிலையிலே இருக்கிறது என்று நான் மட்டும் சொல்ல வில்லை ஆட்சியிலே இருக்கக் கூடிய பல்வேறு ஆய்வறிக்கைகளிலே, கூறப்பட்டிருக்கிறது. ஜமால் முஹம்மது கல்லூரி, சென்னை புதுக்கல்லூரி, பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, போன்ற கல்லூரிகள் தமிழகத்தில் எவ்வாறு உருவாகின என்று சற்று சிந்திப்போமேயானால், நாம் இந்த துறைகளில் முன்னேற வேண்டும் என்பதை இதே சமுதாயம் புரிந்து கொள்வார்கள்.

சுதந்திர இந்தியாவிலே அலிகர் என்ற கல்லூரி இருந்தது அதை அரசு கல்லூரி என அன்றைய காங்கிரஸ் அரசு மாற்றிய பொழுது தமிழகத்திலே மிகப்பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. அன்றைய நேரத்தில் தான் இந்திய யூனியன் முஸ்லிம்லீக் தலைவர் காயிதே மில்லத் அன்றைய கல்வியாளர் களை சந்தித்து தன்னுடைய வேதனையை தெரிவித்த போது இந்தியா பாகிஸ்தான் பிரச்சனையின் காரணமாக இந்த நிலையை மேற் கொண்டுள்ளோம் என்று கூறியதோடு ஏன் முஸ்லிம் சமுதாயம் தனியாக ஆரம்பிக்க கூடாது என்ற யோசனையைசொல்லிய தன் காரணமாகதான் இத்தனை கல்லூரியை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை பதிவு செய்ய கடைமைபட்டிருக்கிறேன்.

இந்த கல்வி கூடங்களையெல்லாம் உருவாக்கிய ஜமால் முஹம்மது கல்லூரியாக இருக்கட்டும், காஜாமியான் ராவுத்தராக இருக்கட்டும், இப்படிபல்வேறு அறிஞர்கள் அன்று செய்த கொடை தன்மை காரணமாகதான் இத்தனை பேர் நாம் கல்வியை பெற்றிருக்கிறோம். ஜமால் முஹம்மது கல்லூரி, புதுக் கல்லூரி, சதக்கத்துல்லா.அப்பா கல்லூரி இந்தியாவை நாடி வந்த பல்வேறு நாட்டிற்கு பெருந்தலைவர் காயிதே மில்லத் மடிப்பிச்சை ஏந்துவது போல தியாகம் செய்து இன்று லட்சக்கணக்கான மக்கள் கல்வியை பெற்றிருக்கிறார்கள் என்றால் அந்த கால பெரியோர்களின் தியாகம் ஏராளம்.

நம் சமுதாயம் கல்வியறிவை பெற வேண்டும். உயர் கல்வியை பெற வேண்டும். அரசின் அனைத்து துறைகளிலும் பணியாற்ற வேண்டும். அப்பொழுது தான் சமுதாயம் எல்லா நிலைகளிலும் உயர்ந்தாக இருக்கும். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை எடுத்துக்கொள்ளுங்கள் நம் சமுதாயம் வஞ்சிக்கப் படுகிறது. காவலர்களின் அராஜகம்.அங்கே 5 முஸ்லிம் களில் ஒரு முஸ்லிம் இருந்தால் பாதுகாப்பு. ஆட்சி யாளர்களிலே 32 மாவட்டங்களில் மூன்று பேர் இருந்தால் நமக்கு பாதுகாப்பு.

இட ஒதுக்கீடு மிகப் பெரிய போராட்டம். அதற்கு முன்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஏ.லத்தீப் சாகிப், வந்த வாசி வஹாப் அவர்கள் எல்லாம் முஸ்லிம்களை பி.சி. கம்யூனிட்டியில் சேர்க்க மிகப் பெரிய போராட்டம் நடத்தினார்கள். தனி இட ஒதுக்கீடு முறை நமக்கு இருந்த்து. சுதந்திரத்திற்கு முன்பாக முஸ்லிம்களை முஸ்லிம்களுடைய எம்.எம்.ஏக்களை தேர்ந்தெடுக்கும் முறை இருந்தது. கேரளாவை விட அதிக முஸ்லிம்கள் உள்ள அஸ்ஸாம் போன்ற மாநிலங்களிலே ஆட்சி அமைக்க முடியவில்லை அதை நாம் சிந்திக்க கடமைபட்டிருக்கிறோம். முஸ்லிம் சமுதாய கல்வி நிறுவனங்கள் கேரளா விலே அதிகமாக இருக்கிறது என்று சொன்னால்.அதற்கு காரணம் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களாக இருப்பதாலே என்பதை சிந்தியுங்கள். நம் வளர்ச்சிக் கான பாதைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். இது போன்ற பணிகளிலே அதிகம் ஈடுபட வேண்டும்.

எங்கள் மாவட்டம் தூத்துக்குடியிலே ஒரு பகுதி அதிகமாக முஸ்லிம்கள் இருந்தார்கள். 5ம்வகுப்பு வரை ஒரு நர்சரி பள்ளிக்கூடம் இருந்தது. அதுவும் இடிந்து விழக்கூடிய நிலையில் இருந்தது. அப்போது முஸ்லிம் லீக்கை அணுகிய போது அங்கே கண்டிப்பாக கட்டிடம் எழுப்பபடும் என்று கூறியஒரு வருடத்திலே கட்டடம் கட்டப்பட்டு சென்ற 31ம் தேதி பேராசிரியர் காதர் மொய்தீன் மூலம் திறக்கப்பட்டது. மேல் நிலை கல்விகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். கல்லூரி படிப்பை தொடர வழிவகை செய்ய வேண்டும். இதை மஹல்லா ஜமா.அத் செய்ய வேண்டும். பல்வேறுகல்லூரிகள் இருந்தாலும் ஒரு ஒருங்கிணைப்பு இருப்பதாக தெரியவில்லை. இதை ஜமால் முஹம்மது கல்லூரி செய்தால் மிகவும் நன்மையாக இருக்கும். திருச்சி என்பது தமிழகத்தின் மையப் பகுதி இந்த ஒருங்கிணைப்பு மூலம் முஸ்லிம்களை அரசு துறைகளை அனுப்ப முடியும். ஒட்டு மொத்தமாக ஒருங்கிணைத்து விழிப்புணர்வு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் முதல்வர்கள் பேராசிரியர் அப்துல் சமது, டாக்டர் ஆர்.காதர்மைதீன், டாக்டர் முஹம்மது ஜிந்தார்ஷா, துணை முதல்வர்கள் டாக்டர் முஹம்மது இப்ராஹிம், சுயநிதிப்பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர் முஹம்மது பாசில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில தொழிலாளர்அணி செயலாளர் ஜி.எம்.ஹாஷிம், மாநில மாணவரணி துணை அமைப்பாளர் அன்சர் அலி, இளைஞரணி அமைப்பாளர் அமீருதீன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஹக்கீம், மற்றும் பல்வேறு ஊர்களில் இருந்து மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இதே போன்று பெண்களுக்காக டி.என்.பி.எஸ்.சி மற்றும் யூ.பி.எஸ்.சி அரசு போட்டி தேர்வுகளுக்கான இலவச விழிப்புணர்வு முகாம் திருச்சி அய்மான் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பல்வேறு கேள்விகளுக்கு அங்கு வருகை தந்த அதிகாரிகள் பதிலளித்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில முதன்மை துணைத்தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.அப்துல் ரஹ்மான் கலந்து கொண்டு அரசு வேலைவாய்ப்பு குறித்தும், மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு எப்படி தயாராக வேண்டும் என்றும் மாணவர்களிடம் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

ஜமாலியன் டைம்ஸ்

தமிழ் மாத இதழ்

ஆசிரியர்
முனைவர் S.முகமது சாலிகு M.Sc.,B.Ed.,Ph.D.,
கல்லூரி முதல்வர்

செய்தி ஆசிரியர்
M.K.ஷாகுல் ஹமீது M.Sc.,M.Phil., (Journalism)

ஆசிரியர் குழு
முனைவர் D.I.ஜார்ஜ் அமெலரத்தினம் M.C.A.,M.Phil.,Ph.D.,
அறிவியல் முதன்மையர், இயக்குனர் M.C.A.,
K.சண்முக வேலாயுதம் M.A.,M.Phil.,
உதவிப் பேராசிரியர், காட்சித்தொடர்பியல்துறை
B.ராமகிருஷ்ணன் M.F.A.,
உதவிப் பேராசிரியர், காட்சித்தொடர்பியல் துறை

நிருபர்கள்
S.முகமது ருஸாஜுப், J.நவநீத்,
G.ஹுசைன் அகமது கான், S.ராஜேஷ்குமார்

ஒளிப்படக் கலைஞர்கள்
R.முகமது காமில், A.விஜய் சாமுவேல்
C.கார்த்திகேயன்

தொடர்புக்கு
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி-620020

காட்சியியல் தொடர்பியல் துறையின் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துகள் படைப்புகள், துறை செய்திகள் எங்களுக்கு அனுப்பவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
துறைத் தலைவர்
காட்சியில் தொடர்பியல் துறை
ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி-620020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன் சார்பாக அச்சிடுவோர்

மக்கள் குரல் TRINITY MIRROR

JAMAL MOHAMED COLLEGE - TIRUCHY
GOLDEN JUBILEE MEET

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் 1966ம் ஆண்டு படித்த 20 முன்னாள் மாணவர்கள் கல்லூரிக்கு வருகை தந்து சுமார் 20 பேர் தனது படித்த துறைகளுக்கு சென்று அன்றைய தினம் இருந்த கல்லூரி இன்றும் அதேபோலத்தான் கல்லூரி வளாகங்கள் இருக்கின்றன என்றும், இதில் மாற்றம் என்னவென்றால் பேராசிரியர்கள் தான் மாறி இருக்கிறார்களே தவிர, நாங்கள் படித்த காலங்களில் இருந்த சூழலே இப்போதும் இருக்கிறது. இதை காண்கிற போது மீண்டும் இளமை வராதா? மீண்டும் கல்லூரியில் படிக்கும் ஆசை வருகிறதே என்று இங்கு வருகை தந்த முன்னாள் மாணவர்கள் கல்லூரி நிர்வாகியிடம் மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

இந்த முன்னாள் மாணவர்கள் கல்லூரியை மட்டும் சுற்றிப்பார்க்கவில்லை. நாம் படிக்கும் காலங்களில் காஜாமியான் விடுதிக்கு சென்று தங்கி படித்த அறைகளில் சென்று சிறிது நேரம் ஓய்வெடுத்து கடந்த கால நினைவுகளை பகிர்ந்துகொண்டதில்லாமல் காஜாமியான் விடுதிக்கு பிரபலமான மதிய உணவான குஸ்காவை ருசி பார்த்து நாங்கள் படித்த காலங்களில் இருந்த சுவையே இன்றும் காண முடிகிறது என்று முன்னாள் மாணவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். அவர்கள் இனி எல்லோரும் நாங்கள் இதுபோன்று ஒற்றுமையாக வருவோமோ, வரமாட்டோமோ தெரியவில்லையே என்று கண்ணீர் மல்க விடைபெற்று சென்றார்கள்.

ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் திருச்சி கிளை சார்பில்

ரமலான் சிறப்பு இப்தார் நிகழ்ச்சி பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜ்முதீன் பங்கேற்றனர்

ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் திருச்சி கிளை சார்பில் ரமலான் சிறப்பு இப்தார் நிகழ்ச்சி காஜா மியான் விடுதியில் சனிக்கிழமை நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முன்னாள் மாணவரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில தலைவர் பேராசிரியர் கே.எம் காதர் மொய்தீன், கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் முனைவர் காஜா நஜ்முதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் படித்த அனைவரும் பல்வேறு துறைகளிலும் வெளிநாடுகளிலும் பணி புரிந்து வருகின்றனர். முன்னாள் மாணவர் சங்க கிளைகள் மலேசியா, சிங்கப்பூர், தம்மாம், ஜித்தா, குவைத், உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் மிகச்சிறப்பாக வருடந்தோறும் இப்தார் நிகழ்ச்சிகள் மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இந்தியாவில் கேரளா, சென்னை, இடங்களிலும் ஜமால் முகமது முன்னாள் மாணவர் சங்கம் செயல்பட்டு வருகிறது. திருச்சியில் ஜமால் முகமது முன்னாள் மாணவர் சங்க கிளை 2015ம் ஆண்டு ரமலான் மாதத்தில் திருச்சி காஜாமியான் விடுதியில் தொடங்கப்பட்டது. தலைவராக அஹமது பிரதர்ஸ் உரிமையாளர் ஏ.கே உசைன் தலைவராகவும், அப்துல் அலீம் செயலாளராகவும், ரியாஸ் அஹமது பொருளாளராகவும், நியமிக்கப்பட்டனர்.

இந்த வருடத்தின் ஜமால் முகமது முன்னாள் மாணவர் சங்க திருச்சி கிளை சார்பாக ரமலான் சிறப்பு இப்தார் நிகழ்ச்சி திருச்சி காஜாமியான் விடுதியில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் காஜா நஜ்முதீன் தலைமை வகித்து பேசினார். துணை முதல்வரும் முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளர் முனைவர் இஸ்மாயில் மைதீன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன், உதவிச் செயலாளர் ஜமால் முகமது, பொருளாளர் கே.ஏ கலீல் ரஹ்மான், முன்னாள் முதல்வர் பேராசிரியர் அப்துல் ஸமது, முன்னாள் துணை முதல்வர் முனைவர் மன்சூர், அய்மான் மகளிர் கலை கல்லூரி தாளாளர் முனைவர் எம்.எம் ஷாஹுல் ஹமீது, கல்லூரி சுய நிதி பிரிவின் இயக்குநர்கள் முனைவர் அப்துல் சமது, பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முனைவர் முஹமது சகாபுதீன், முனைவர் முஹமது பாசில், பேராசிரியர் ஜமால் முகமது ஜுபைர், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் மாணவரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்தலைவர் பேரா சிரியர் கே.எம் காதர் மொய்தீன் கலந்து பேசுகையில்,

தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கல்லூரிகள் இருந்தாலும் திருச்சி ஜமால் முகமது கல்லூரிக்கென்று ஒரு சிறப்பு இருக்கிறது. என்னச்சிறப்பு என்றால் இங்கு படித்த மாணவர்கள் மத்திய, மாநில அரசுகளில் பல்வேறு துறைகளில் இருக்கின்றனர். அதுமட்டுமில்லாமல் வெளிநாடுகளிலும் கல்லூரி மாணவர்கள் அதிக அளவில் பணியாற்றுவதில்லாமல் பல்வேறு சமூக பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எந்த ஒரு துறையிலும் ஜமால் முகமது கல்லூரியில் படித்த மாணவர் என்றால் தனி சிறப்பும், மரியாதையும் கொடுக்கிறார்கள். சில கல்லூரிகளில் அதிக அளவில் கட்டிடங்கள் இருந்தாலும் படிப்பதற்கு மாணவர்கள் இருப்பதில்லை. ஆனால், ஜமால் முகமது கல்லூரிக்கு அதிக அளவில் மாணவர்கள் படிக்கிறார்கள். இதன் மூலம் இந்த மாணவர்களுக்கு ஒழுக்கம், நற்பண்புகள் போன்ற பல்வேறு சமூக அக்கறை கொண்ட சேவைகளை இக்கல்லூரி கற்று கொடுக்கிறது.

யோகாவில் 64 வகையான ஆசனங்கள் இருக்கின்றன. இவை அனைத்தையும் யாராலும் செய்ய முடியாது. அப்படி செய்தால் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடும். இதை முழுமையாக கற்று தேர்ந்தவன் என்ற முறையில் கூறுகிறேன். தொழுகையில் 24ஆசனங்கள் உள்ளிருக்கிறது. அதை அனைவராலுமே செய்ய முடியும். இதை செய்வதன் மூலம் உடல் ஆரோக்கியமும், மன நிம்மதியும் கிடைக்கிறது. தொழுகையின் மூலம் இறைவனிடத்தில் அந்தஸ்தும் கிடைக்கிறது.

இந்த நோன்பு காலங்களில் கேட்கப்படும் அனைத்து துஆக்களும் அங்கீகரிக்கப்படும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த நோன்பு கால கட்டங்களில் இந்த கல்லூரி உருவாக உறுதுணையாக இருந்த காஜாமியான் ராவுத்தர், ஜமால் முகமது ஆகியோர்க்கு துஆ செய்ய வேண்டும். அதே போன்று என்னுடைய மனைவி உடல் நலம் குன்றிய நிலையில் இருந்து வருகிறார். இந்த நேரத்தில் அவருடன் இருந்து மருத்துவ உதவிகளை செய்து வருகிறேன். என்னுடைய மனைவிக்காக இந்த நோன்பு காலக்கட்டங்களில் அவர் குணமடைய துஆ செய்யுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நோன்பு காலங்களில் குடிப்பழக்கம் மற்றும் தீய செயல்களில் இருந்து இஸ்லாமியர்கள் விளகி கொள்கிறார்கள். இந்த நோன்பு காலம் முடிந்தபிறகும்நிறந்தமாக விடுபட வேண்டும் என்று எல்லோரும் துஆ செய்வோம் என பேசினார்.

திருச்சி கிளையின் ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் ரியாஸ் அஹமது, பெமினா ஷாப்பிங் உரிமையாளர் முஹமது இஸ்மாயில், தாசில்தார் அக்பர் அலி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் முனைவர் எம்.ஏ நிஜாம், வழக்கறிஞர் நசீர் அலி, திருச்சி செய்தியாளர் எம்.கே ஷாஹுல் ஹமீது, கல்லூரியின் தேர்வு நெறியாளர் முனைவர் மஜ்ஹர் நஜீப்கான், விடுதி ஒருங் கிணைப்பாளர் முனைவர் முஹமது சர்புதீன், துணை காப்பாளர்கள் முனைவர் சையது அலி பாஷா, முனைவர் அப்துல் ஹக்கீம், முனைவர் ஜாஹிர் உசைன், முனைவர் பிரசன்னா, மற்றும் சங்கத்தின் உறுப் பினர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை துணை முதல்வர் முனைவர் முஹமது இப்ராஹிம் தொகுத்து வழங்கினார். திருச்சி கிளை சங்கத்தின் செய லாளர் அப்துல் அலீம் நன்றி கூறினார்.

விஷுவல் கம்யூனிகேசன் மாணவர்களுடன்

மலேசிய வானொலி மற்றும் தொலைக்காட்சி இஸ்லாமிய தொகுப்பாளர் உஸ்தாதா அமீரா கலந்துரையாடல்

RADIO MALAYSIA
Get in tune, Everywhere.

ஜமால் முஹம்மது கல்லூரி விஷுவல் கம்யூனிகேசன் துறை சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவிற்கு பொறுப்பு தலைவர் டாக்டர் ஜார்ஜ் அமல்ரத்தினம் தலைமை வகித்தார். துறையின் உதவி பேராசிரியர் சண்முக வேலாயுதம் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இந்த கருத்தரங்கத்தின் சிறப்பு விருந்தினராகமலேசியவானொலி மற்றும் தொலைக்காட்சியின் இஸ்லாமியா நிகழ்ச்சித் தொகுப்பாளர் உஸ்தாதா அமீரா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு துறை மாணவர்களுடன் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். பின்னர் அவர் பேசுகையில்,

உலகப்புகழ் பெற்ற மலேசிய கலாச்சாரம் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் பல்வேறு உணவு வகைகளை விரும்பி சாப்பிடுவதுகுறித்தும் பின்னர் ஹலால் செய்து சுத்தமான உணவுகளை பரிமாற்றுவதையும், பண்டிகை நாட்களில் அந்தந்த பண்டிகைக்கு ஏற்ப மலேசிய நாட்டு பிரதமர் உடையணிந்து பங்கேற்கும்போது பல்வேறு நிகழ்வுகளை காணமுடிகிறது.

அனைத்து மத ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாக மலேசிய கலாச்சாரம் எடுத்துக்காட்டுகிறது என்றும், அதேபோன்று மலேசிய பிரதமர் ஒவ்வொரு கலாச்சாரத்திற்கு ஏற்ப தனது உடமைகளை மாற்றுவதன் மூலம் தனது கலாச்சாரத்தை மாத்திரம் எக்காரணத்தை கொண்டும் விட்டுக்கொடுக்க மாட்டார் என்று பேசினார்.

பின்னர் பல்வேறு கேள்விகளை மாணவர்கள் கேட்டார்கள். அதற்கு மலேசிய வானொலி தொகுப்பாளர் பதிலளித்ததுடன், அந்த மாணவர்களை பாராட்டி எதிர்காலத்தில் நீங்கள் ஒரு தொகுப்பாளராகவோ அல்லது செய்தியாளராகவோ வரவேண்டும் என நான் ஆசைப்படுகிறேன் என்று கூறினார். இவ்வாறு மாணவர்களிடம் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

பேராசிரியர் அப்பாஸ்கான் பேசுகையில்,

பண்பலை வானொலியில் நிகழ்ச்சிகளை தயார் செய்வது மற்றும் காலத்திற்கு ஏற்றபடி நிகழ்ச்சிகளை செம்மையுடன் வழங்குவது குறித்து செயல் விளக்கத்துடன் கூறினார். விழாவில் அரபித்துறை பேராசிரியர்கள் டாக்டர் முகமது இஸ்மாயில், டாக்டர் காஜாமைதீன், விஷுவல் கம்யூனிகேசன் துறை உதவி பேராசிரியர் ராமகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

JAMAL MOHAMED COLLEGE
SPECIAL IFTHAR
KMA

ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகம் ரமலான் சிறப்பு இப்தார் நிகழ்ச்சி காஜாமியான் விடுதி வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் முகம்மது சாலிக் தலைமை வகித்தார். உதவி செயலாளர் ஜமால் முஹம்மது, பொருளாளர் கலில்அஹமது, துணை முதல்வர்கள் டாக்டர் முகம்மது இப்ராஹிம், டாக்டர் இஸ்மாயில் மைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு விருந்தினராக ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவரும், மணப்பாறை தாசில்தார் அக்பர் அலி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு ரமலான் பற்றிய சிறப்புகளையும், அதன் நன்மைகளை பற்றியும் பேசினார். விழாவில் எம்.ஏ.எம். பொறியியல் கல்லூரி தாளாளர் டாக்டர் எம்.ஏ. முகம்மது நிஜாம், திரைப்பட இயக்குனர் அமீர், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் திருச்சி கிளை செயலாளர் அப்துல் அலீம், விடுதி இயக்குனர்கள் டாக்டர் பி.என்.பி. முகம்மது சகாபுதீன், டாக்டர் முகம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது ஜுபைர், விடுதி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் முகம்மது சர்புதீன், விடுதி காப்பாளர்கள் டாக்டர் பிரசன்னா, டாக்டர் முகமது ஜாகீர், டாக்டர் சையது அலி பாதுஷா மற்றும் துணைக்காப்பாளர்கள், மாணவர்கள் திரளாக இதில் கலந்து கொண்டனர்.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகிறது

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் சுதந்திர தினமான (15ம் தேதி) திங்கள் கிழமை அன்று காலை 10மணியளவில் கல்லூரி வளாகத்தில் உள்ள கபூர் கலையரங்கத்தில் முன்னாள் மாணவர் சந்திப்பு கூட்டம் நடைபெறுகிறது. இதில் சாஹித்ய அகாடமி விருது பெற்ற ஆமிஷா, இரா. நடராஜன், திருச்சி எம்.ஏ.எம் பொறியியல் கல்லூரி தாளாளர், செயலாளர் டாக்டர் எம்.ஏ முஹம்மது நிஜாம், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற இருக்கிறார்கள். மேலும், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கும் முன்னாள் மாணவர்களுக்கு கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே காஜா நஜ்முதீன் விருதுகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார். இந்த முன்னாள் மாணவர் சந்திப்பில் சென்னை, மலேசியா, சிங்கப்பூர், துபாய், ஜித்தா,, சவுதி அரேபியா, கத்தார், உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலுள்ள முன்னாள் மாணவர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கிறார்கள். பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் முன்னாள் மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகிறது.

பெயர்கள் பின்வருமாறு :

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

NOSTALGIA
NOSTALGIA

வாழ்க... வாழ்க...

விருதுகளை வாங்க இருக்கும் ஜமாலியன் முன்னாள் மாணவர்களே உங்கள் எதிர்காலம் சிறப்பாக அமைய எல்லா வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

என்றும் ஜமாலியன் உங்களை வரவேற்கும்...

– ஆசிரியர்

GLOBAL UNDERSTANDING FOR SUSTAINABLE DEVELOPMENT
AWARD - 2016
GLOBAL UNDERSTANDING FOR SUSTAINABLE DEVELOPMENT
INDIA - SRILANKA
AUDACIOUS DREAMS FOUNDATION
EDU-PRENEUR
AWARD
FOR PROMOTING HIGHER EDUCATION AMONG RURAL YOUNG PEOPLES
SRI LANKA Youth

மக்கள் குரல் TRINITY MIRROR

ஆர்.முத்துக்குமார்
ஆசிரியர்

வாழ்த்து மடல்

2016 ஆம் ஆண்டின் இளையோர் தினக் கருப் பொருளாக "2030ம் ஆண்டைநோக்கி :வறுமை ஒழிப்பு மற்றும் வளங்குன்றா வளர்ச்சி" என்பதை ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருக்கிற வேளையில், ஜமால் முகமது கல்லூரி காட்சித் தொடர்பியல் துறை மாணவர்கள் ஊடகத்தின் வலிமையை சரியாகப் பயன்படுத்தும் வண்ணம், பயிற்சிக்காக வெளியிடப்படும் மாத இதழான "ஜமாலியன் டைம்ஸ்" மாதஇதழ் தொடர்ந்து வெளிவந்து சமுதாயத்தில் நல்லபல மாற்றங்களை ஏற்படுத்த மனதார வாழ்த்துகிறேன்.



S.R. LAKSHMI NARAYANAN
Editor & Publisher

ராக்போர்ட் டைம்ஸ்

வாழ்த்து மடல்

அன்புடையீர் வணக்கம். வாழிய நலம்.

தேதி : 12.08.2016
திருச்சி.

என்றும் அன்புடன்,

(ஆசிரியர் - வெளியீட்டாளர்)

ஜமால்முஹம்மது கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 32வது ஆண்டின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு

முதல்வர் டாக்டர் முஹம்மது சாலிகு முன்னிலையில் திருமணத்தில் வரதட்சனை வாங்கமாட்டோம் மாணவர்கள் உறுதிமொழி

ANTI DOWRY ASSOCIATION

ANTI DOWRY ASSOCIATION

திருச்சி ஜமால்முஹம்மது கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 32வது புதிய நிர்வாகிகள் பதிவியேற்புவிழாவில் கல்லூரிமுதல்வர் டாக்டர் முஹம்மது சாலிகு முன்னிலையில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் நாங்கள் எக்காரணத்தை கொண்டும் திருமணத்தில் வரதட்சனை வாங்கமாட்டோம் என்று உறுதிமொழி ஏற்றுகொண்டனர்.

உலகத்தில் எத்தனையோ கல்லூரிகள் இருந்து வருகின்றன. அதில் பல்வேறு சமூக சங்கங்கள் இருந்து வருகின்றன. குறிப்பாக இந்தசங்கங்கள் எல்லாமே இரத்ததானம், மற்றும் என்.எஸ்.எஸ். போன்ற அமைப்பாக செயல்பட்டு வருகின்றன.

ஆனால் உலகத்திலேயே எந்தகல்லூரியிலும் இல்லாத அமைப்புதான் திருச்சி ஜமால்முஹம்மது கல்லூரியில் கைக்கூலி கைவிட்டோர் கழகத்தை இக்கல்லூரியில் பயின்ற என்.ஏ.எம். அப்துல்அலீம் என்பவரால் கடந்த 30ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது.

இந்த கழகம் பணி என்னவென்றால் வரதட்சனை வாங்ககூடாது என்று மஹர் கொடுத்து திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று மஹல்லா ஜமாஅத்துகளுக்கு சென்று விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

இந்த அமைப்பில் உள்ளவர்கள் முழுக்க முழுக்க கல்லூரி மாணவர்களால் நிர்வாகம் செய்யப் பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.இந்த கழகத்தில் உள்ள மாணவர்கள் வரதட் சனை வாங்ககூடாது என்றும் பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன் இக்கழகத்தின் மூலமாக உதவும்கரங்கள் என்ற அமைப்பும் செயல்பட்டு வருகிறது.இவர்கள் ஊனமுற்றோர்களாகயார் யாரெல்லாம் இருக்கின்றார்களோ அவர்களுக்கு நேரடியாக சென்று அவர்களுக்கு தேவையான அன்றாட பணிகளை செய்துகொடுப்பதுடன் அவர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்வார்கள்.

இந்த வருடத்தின் 32வது புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா திருச்சி ஜமால்முஹம்மதுகல்லூரி காஜாமியான் விடுதி வளாகத்தில் புதன்கிழமை இரவு நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாலிகு தலைமை வகித்துபேசினார். கூட்டத்தை மாணவர் பி.அக்பர் கிராஅத் ஓதி தொடங்கி வைத்தார்.

கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் ஆலோசகர் டாக்டர் அப்துல் ஹக்கீம் அனைவரையும் வரவேற்று பேசினார்.

துணை முதல்வர்கள் முனைவர் இஸ்மாயில் மைதீன், முனைவர் முஹம்மது இப்ராஹீம், கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் நிறுவனரும் ஜமால்முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் திருச்சி பிரிவு தலைவர் என்.ஏ.எம். அப்துல்அலீம், ஜமால்முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் மலேசியா பிரிவு செயலாளர் கான் என்ற நகுருல்லா கான், விடுதி இயக்குநர்கள் முனைவர் பி.என்.பி. முஹம்மது சகாபுதீன், முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது ஜுபைர்.ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆண்டின் தலைவராக மாணவர்முஹம்மது ஷபீக், செயலாளராக என்.எஸ். அஹமது உவைஸ், பொருளாளராக முஹம்மது ரஜீக், உதவும் கரங்கள் அமைப்பின் செயலாளராக முஹமது ரியாஸ், துணை தலைவர்களாக முஹமதுஉசேன், முஹமது சபயாத், துணை செயலாளராக முஹம்மது பைஜுர் ரஹ்மான், துணை பொருளாளராக முஹமது அப்ஜர், பிரதி பலிப்பு ஆசிரியர்களாக திருனாக்கேஷ்வரன், வேல்முருகன், சகிப்பிலால், சமுர்தீன், பைசல்அஹமது உள்ளிட்ட பல்வேறுபொருப்புகளுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாலிகு பதவிபிரமாணம் செய்துவைத்தார். பின்னர் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கினார். பின்னர் முதல்வர் டாக்டர் முஹம்மது சாலிகு முன்னிலையில் இச்சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட 100க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எக்காரணத்தை கொண்டும் திருமணத்தில் மஹர் கொடுத்து திருமணம் முடிப்போம் என்றும் எந்த சூழ்நிலையிலும் வரதட்சனை வாங்க மாட்டோம் என்றும் எங்கள் குடும்பத்தில் யாருக்கும் வரதட்சனை கொடுத்து திருமணத்தை முடிக்கவோ உறுதுணையாக இருக்கமாட்டோம் என்றும் யாரும் வரதட்சனை கொடுக்காமல் திருமணம் முடிக்க வேண்டும் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம் எனஉறுதி மொழி ஏற்றுக் கொண்டார்கள். விழாவில் விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது சர்புதீன், காப்பாளர்முனைவர் பிரசன்னா, முனை வர்சையது அலி பாதுஷா, மற்றும் துணை காப்பாளர்கள் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் தலைவர் முஹம்மது சபீக் நன்றி கூறினார்.